# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No. 15/2021

PW1– காமராஜ் நாள் 12.03.2025

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைதொடர்ச்சி</u>**

அகிலாண்டேஸ்வரியை கவுள்பாளையத்தில் உள்ள பொன்னுசாமிக்கு திருமணம் செய்து கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. அகிலாண்டேஸ்வரி எந்த ஊர் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு அவர் உறவுமுறை அல்ல. நேரடியாக பழக்கவழக்கமும் இல்லை. அவர் எந்த ஊரில் குடியிருக்கிறார் என்றும் எனக்கு தெரியாது. என் சகலை தான் அழைத்து வந்தார். என் சகலை 18.08.2020 அன்று தான் அகிலாண்டேஸ்வரியை அழைத்து வந்தார் அதற்கு முன்பு நான் அவரை பார்த்ததில்லை. என் வீட்டுக்கு அழைத்து வந்தார். அவரிடம் சொத்து எப்படி பாத்தியம் என்று கேட்டேன். அவர் நீதிமன்றம் மூலம் தனக்கு தீர்ப்பாகி சொத்து கிடைத்தது என்று சொன்னார். நான் பட்டா, வாரிசுசான்றிதழ் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆகியவற்றை பார்த்தேன். காலை 11 மணியளவில் தான் வந்தார். 2 ஏக்கர் 4 செண்ட் நிலத்தை ஏக்கர் 2 கோடி என்று விலை பேசினேன். அவர் உடனே சரி என்று சொன்னார். உடனே ஒப்பந்தம் போட்டு அட்வான்சாக ரூ.15 லட்சம் கொடுத்தேன். அதனை யூனியன் வங்கியிலிருந்து வாங்கி கொடுத்தேன். சொந்தகாரர்களிடம் இருந்தும் வாங்கி கொடுத்தேன். யூனியன் பேங்கிலிருந்து எவ்வளவு தொகை எடுத்து கொடுத்தேன் என்று ஞாபகமில்லை ஆவணங்களை பார்த்து தான் சொல்ல வேண்டும். சொந்தகாரர்களிடம்இருந்து எவ்வளவு வாங்கினேன் என்று சீட்டை பார்த்து தான் சொல்லமுடியும். ஒப்பந்தம் எத்தனை மணிக்கு போட்டேன் என்று ஞாபகமில்லை. ஒப்பந்தம் போட்டபோது சகல சம்பத், அகிலாண்டேஸ்வரி, திருஞானசம்பந்தம், நான் ஆகியோர் இருந்தோன். வேறு கிராமத்து மக்கள் யாரும் அங்கில்லை. 18.08.2020 அன்று தான் ஒப்பந்தம்போட்டோம். ஒப்பந்தம் மதிய நேரத்தில் தான் செய்தோம். அக்ரிமண்ட் ரூ.100 ஸ்டாம்ப் பேப்பரில் எழுதப்பட்டது. நான் தான் ஸ்டாம்ப் பேப்பரை வாங்கினேன். எந்த முத்திரை விற்பனையாளரிடம்

வாங்கினேன் என்று ஞாபகமில்லை. அந்த ஒப்பந்தம் தட்டச்சு செய்யப்பட்டது. யார் தட்டச்சு செய்தார் என்று ஞாபகமில்லை. பத்திர அலுவலகத்தில் வைத்து தட்டச்சு செய்தேன். எனக்கு ஞாபகசக்தி குறைவாக உள்ளது. நான் ஞாபசக்தி குறைவாக உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்களை பார்த்தால் தான் என்னால் சொல்லமுடியும். ஒப்பந்த பத்திரத்தை யாரிடம் தட்டச்சு செய்தேன் என்று என்னால் தற்போது சொல்ல முடியாது. நான் தான் தட்டச்சு செய்து வந்தேன். அக்ரிமெண்டில் உள்ள விவரங்களை தட்டச்சு செய்வதற்கு சொன்னது நான் தான். தட்டச்சு செய்தது யார் என்ற இடத்தில் பெயரும், கையொப்பமும் பெற்றேனா என்ற ஞாபகமில்லை. தட்டச்சு செய்து கொண்டு சித்தளி வந்தேன். அந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்யும் போது நானும், சம்பத், அகிலாண்டேஸ்வரி, திருஞானசம்பந்தம் ஆகியோர் இருந்தோம். சம்பத்திடம் சாட்சி கையெழுத்து வாங்கினேன். இந்த ஒப்பந்தத்தில் முதல் கையெழுத்து நான்தான் போட்டேன். இரண்டாவதாக அகிலாண்டேஸ்வரி போட்டார். சம்பத் முதல் சாட்சியாக போட்டார். திருஞானசம்பந்தம் இரண்டாவது சாட்சியாக போட்டார். கையெழுத்து போட்ட உடனே முன்பணத்தை கொடுத்தேன். ஒப்பந்த பத்திரத்தின் அசலை நான் வைத்து கொண்டேன். ஜெராக்ஸ் நகல் எடுத்து அகிலாண்டேஸ்வரியிடம் கொடுத்தேன். பின்பு அசல் ஒப்பந்தத்தை நான் வைத்து கொண்டேன். அகிலாண்டேஸ்வரி நகலை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார். சம்பத்தும், திருஞானசம்பந்தமும் போய்விட்டார்கள். அகிலாண்டேஸ்வரி சம்பத்துக்கு உறவினர் என்று சொன்னார். அகிலாண்டேஸ்வரி என்னிடம் பெரிய தொகைக்கு ஒப்பந்தம் போட்டார். நான் ஒப்பந்தத்தை பதிவு செய்யலாம் என்று நினைத்தேன் ஆனால் சம்பத் பயப்படா வேண்டாம் என்றும், அகிலாண்டேஸ்வரி ஒப்பந்தப்படி நடந்து கொள்வார் என்று சொன்னார். பொதுவாக 3ம் நபரிடம் ஒப்பந்தம் செய்யும்போது பதிவு செய்வது வழக்கம் என்றால் அது அவரவர் விருப்பத்தை பொருத்தது. 2020 ஆம் ஆண்டு நான் வருமான வரிக்கு தணிக்கை செய்யப்பட்டிருந்தேன்.

2020-2021 நிதிஆண்டுக்கு வருமானவரி துறைக்கு நான் கணக்கு ஒப்படைத்தேன். அந்த வருமானவரி கணக்கில் ரூ.15 லட்சம் அட்வான்ஸ் கொடுத்ததை காட்டியுள்ளேன். நான் காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னால் என்னுடைய 2020-2021 வருமான வரிகணக்கை தாக்கல் செய்ய முடியும். நான் சிட்டியூனியன் வங்கி, யூனியன் வங்கியிலும் கணக்கு வைத்திருக்கிறேன். யூனியன் வங்கி முன்பு கார்பரேஷன் வங்கியாக இருந்தது. 18.08.2020 அன்று வங்கியிலிருந்து குறிப்பிட்ட தொகையை எடுத்ததற்கு பதிவுகள் இருக்கும். 18.08.2020 தேதியில் பதிவுள்ள வங்கி கணக்கை என்னால் தாக்கல் செய்ய முடியும். 18.08.2020 க்கு பிறகு அகிலாண்டேஸ்வரியை நான் பார்க்கவில்லை சம்பத் மூலமாக 2021 பிப்ரவரி முதல் வாரத்தில் சொல்லி அனுப்பினேன். தேதி முடிவதற்கு முன்பாக மறுபடியும் மூன்று நாட்கள் முன்பாக சொல்லி அனுப்பினேன். ஆனால் அவர் வரவில்லை. 15.02.2021 அன்று வாலிகண்டபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அவரை வரசொல்லி காத்திருந்தேன். ரூ.3 கோடியே 95 லட்சம் வங்கிமூலமாக கடன் பெற்று தர ஏற்பாடு செய்திருந்தேன். அவர் வந்திருந்தால் வங்கியில் கடன் வாங்கி கொடுத்திருப்பேன். 15.02.2021 அன்று காலையிலிருந்து மாலை 5 மணி வரை காத்திருந்தேன். அவர் வராததால் போய்விட்டேன். வா.சா.ஆ-3 வழக்கு தாக்கல் செய்த பிறகு 26.03.2024 அன்று வாங்கி தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.3 ல் கடன் பெறுவதற்கான அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றினால் கடன் கொடுப்பதாக சொன்னார்கள் என்றால் சரிதான். ஏதாவது ஒரு வழிமுறையை பின்பற்றாவிட்டால் கடன் கிடைக்காது என்றால் சரிதான். அக்ரிமெண்ட் பின்போ அல்லது அக்ரிமண்ட் முடிவதற்கு முன்போ வங்கியிலிருந்து கடன் கொடுப்பதற்கு தயாராக இருப்பதாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு சாதகமாக தீர்ப்பானாலோ, பாக்கி தொகையை கட்ட சொன்னாலோ நான் வங்கி மூலமாக கடன் பெற்று தான் செலுத்த முடியும். வழக்கு போடும்போது பாக்கி கிரைய தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு

செய்யவில்லை. வழக்கு போட்டதிலிருந்து இப்போது வரையிலும் பாக்கி கிரைய தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை. சித்தளியிலுள்ள கணேசன் மகன் ரமேஷ் என்பவரின் சகோதரியை திருமணம் செய்துள்ளேன். ரமேஷ் நானும் சுமூகமான உறவு முறையில் தான் இருக்கிறோம். ரமேஷ் என்பவர் அகிலாண்டேஸ்வரியிடமிருந்து 18.09.2024 அன்று தாவா 2வது அயிட்ட செங்குணம் சர்வே எண். 239/9பி, 48.5 ஏர்ஸ் சம்பந்தமாக ஒரு கிரைய பத்திரம் ஏற்படுத்தி கொண்டுள்ளார் என்பது பற்றி எனக்கு தெரியாது. அவரை நான் தரப்பினராக சேர்க்க வேண்டுமா என்று என் வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். தாவா 1வது அயிட்ட சொத்து சம்பந்தமாக அரியலூர் பகுதியை சேர்ந்த வீரமுத்து என்பவர் மற்றும் வீரம்மாள் ஆகியோர் சேர்ந்து ரஞ்சித் என்பவருக்கு கிரைய பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டுமா என்பதை வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும். இந்த வழக்கிலுள்ள தாவா சொத்து சம்பந்தமாக பொன்னுசாமியின் வாரிசுகள் என்று சொல்லி ஒரு வீரம்மாள் என்பருக்கும் பிரதிவாதிக்கும் பெரம்பலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முடிந்து மேல்முறையீடு சார்பு நீதிமன்றத்தில் உள்ளது பற்றி எனக்கு தெரியாது. எந்த நீதிமன்றத் தீர்ப்பை என்னிடம் காட்டினார் என்று எனக்கு ஞாபகமில்லை. மேல்முறையீடு உள்ளதா என்பதை பற்றி நான் கேட்டுகொள்ளவில்லை. வா.சா.ஆ.6 ல் பத்திர பதிவுன் போது இதர வாரிசுதாரர்களையும் அழைத்து வந்து கையொப்பம் இட செய்யவேண்டியது 1 நபரின் கடமையாகும் என்று எழுதப்பட்டுள்ளது. அதற்கு அர்த்தம் அவருக்கு உள்ள வாரிசுகளையும் அழைத்து வந்து கையெழுத்து போடவேண்டும் என்பது தான். யார் யார் வாரிசுகள் என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. அகிலாண்டேஸ்வரிக்கு மேலும் வாரிசுதாரர்கள் உள்ளது போல் ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையிலேயே அகிலாண்டேஸ்வரிக்கு எந்த வாரிசுகளும் இல்லை என்றும், நானாகவே ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதால் தான் இதுபோன்ற சரத்தை

எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ல் உள்ள கையெழுத்து அகிலாண்டேஸ்வரி உடையது அல்ல என்றும், மோசடியாக நானும் என் சகலையும் சேர்ந்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதிலுள்ள திருஞானம் கையெழுத்தும் அவருடையது அல்ல எ்ன்றும் என்னால் போர்ஜரியாக சம்பத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.